முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

M.C.O.P. No. 17/2023 and MCOP. No. 19/2023

தேதி : 15-04-2024

(ம.சா.1) – ராமேஸ்வரி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை (2 ம் எதிர்மனுதாரர் தரப்பு):

06.11.2022 ம் தேதி விபத்து நடந்தது. அன்றைய தினமே போலிசில் புகார் கொடுத்தேன். 08.11.2022 ம் தேதிதான் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றும், அன்றைய தினமே புகார் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையிலே 08.11.2022 அன்றுதான் நான் புகார் கொடுத்ததாக உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய வயது, தொழில் மற்றும் வருமானம் ஆகியவற்றை காண்பிப்பதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தபோது விபத்து நடந்தது. 3 ம் எதிர்மனுதாரர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வாகனத்தை ஓட்டிவந்தபோது இண்டிகேட்டர் போட்டு வலதுபுறமாக திரும்ப முயன்றபோது என்னுடைய கணவர் மோட்டார் சைக்கிளை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து 3 ம் எதிர்மனுதாரா் காரின் மீது மோதி விபத்தை வரவழைத்து கொண்டார் என்றால் சரியல்ல. 3 ம் எதிர்மனுதாரர் சட்டவிதிகளை கடைபிடித்து மெதுவாகதான் அவரது வாகனத்தை ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் தான் மோட்டார் சைக்கிளை அதிவேகமாவும், சட்டவிதிகளை கடைபிடிக்காமலும், தலைக்கவசம் அணியாமலும்

ஓட்டிவந்து என்னுடைய கணவரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் ஓட்டிவந்த வாகனம் அவருக்கு முன்னால் சென்ற வாகனத்தை முந்தி செல்வதற்காக ரோட்டின் நடுவில் உள்ள வெள்ளை கோட்டை தாண்டி வந்து வலதுபுறமாக எங்கள் மீது இடித்துவிட்டதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. பின்னால் உட்கார்திருந்த நானும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் 3ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டிருந்தால் உடனடியாக புகார் கொடுத்திருப்போம் என்றும், விபத்திற்கு அவர் காரணம் இல்லை என்பதால்தான் 2 நாட்கள் கழித்து பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் நான் தலைக்கவசம் அணியவில்லை என்றும், அவ்வாறு அணிந்திருந்தால் நான்சொல்வதுபோல் தலையில் ரத்தக்கசிவு ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எனக்கு மருத்துவமனையில் அறுவைச்சிகிச்சை செய்தார்கள். எனக்கு அறுவை சிகிச்சை செய்தற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், அறுவை சிகிச்சை செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது உடலில் எல்லா பாகங்களிலும் காயம் பட்டதாக காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. எனக்கு கொடுங்காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாக தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் 7 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாக காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவமனை

பில்களுக்கு மருத்துவரின் பரிந்துரைகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் மருத்துவமனை பில்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. மருத்துவ செலவினை காண்பிப்பதற்கு நான் எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் முழுமையாக குணமடைந்து விட்டதும் என்றும், எனவே மேலும் மருத்துவ செலவிற்கு ரூ.50 ஆயிரம் செலவாகும் என்று நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் வியாபாரம் செய்வதன் மூலம் ரூ.20 ஆயிரம் சம்பாதிப்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பின்னிட்டு ரூ.50 ஆயிரம் சம்பாதிப்பதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் என்னுடைய கணவர்தான் என்றும், 3 ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு எந்தவிதத்திலும் காரணம் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் 2 ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு தொகை செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளரையோ அதன் காப்பீடு நிறுவனத்தையோ வழக்கில் கட்சியாக சேர்க்காததால் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் ) : இல்லை.

மறுவிசாரணை – இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.04.16 10:44:17 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.

முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

M.C.O.P. No. 17/2023 and MCOP. No. 19/2023

தேதி : 15-04-2024

(ம.சா.2) – ராமசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை (2ம் எதிர்மனுதாரர் தரப்பு):

06.11.2022ம் தேதி விபத்து நடந்தது. அன்றைய தினமே போலிசில் புகார் கொடுத்தேன். 08.11.2022ம் தேதிதான் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றும், அன்றைய தினமே புகார் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையிலே 08.11.2022 அன்றுதான் நான் புகார் கொடுத்ததாக உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய வயது, தொழில் மற்றும் வருமானம் ஆகியவற்றை காண்பிப்பதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தபோது விபத்து நடந்தது. 3ம் எதிர்மனுதாரர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வாகனத்தை ஓட்டிவந்தபோது இண்டிகேட்டர் போட்டு வலதுபுறமாக திரும்ப முயன்றபோது நான் மோட்டார் சைக்கிளை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து 3ம் எதிர்மனுதாரா் காரின் மீது மோதி விபத்தை வரவழைத்து கொண்டேன் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் சட்டவிதிகளை கடைபிடித்து மெதுவாகதான் அவரது வாகனத்தை ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல. நான்தான் மோட்டார் சைக்கிளை அதிவேகமாவும், சட்டவிதிகளை கடைபிடிக்காமலும், தலைக்கவசம் அணியாமலும் ஓட்டிவந்து

என்னுடைய கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் ஓட்டிவந்த வாகனம் அவருக்கு முன்னால் சென்ற வாகனத்தை முந்தி செல்வதற்காக ரோட்டின் நடுவில் உள்ள வெள்ளை கோட்டை தாண்டி வந்து வலதுபுறமாக எங்கள் மீது இடித்துவிட்டதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நானும் பின்னால் உட்கார்திருந்த என் மனைவியும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் 3ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டிருந்தால் உடனடியாக புகார் கொடுத்திருப்போம் என்றும், விபத்திற்கு அவர் காரணம் இல்லை என்பதால்தான் 2 நாட்கள் கழித்து பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் நான் தலைக்கவசம் அணியவில்லை என்றும், அவ்வாறு அணிந்திருந்தால் நான்சொல்வதுபோல் தலையில் ரத்தக்கசிவு ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எனக்கு மருத்துவமனையில் அறுவைச்சிகிச்சை செய்தார்கள். எனக்கு அறுவை சிகிச்சை செய்தற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், அறுவை சிகிச்சை செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது உடலில் எல்லா பாகங்களிலும் காயம் பட்டதாக காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. எனக்கு கொடுங்காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாக தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாக காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவமனை பில்களுக்கு மருத்துவரின் பரிந்துரைகள்

எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் மருத்துவமனை பில்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. மருத்துவ செலவினை காண்பிப்பதற்கு நான் எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் முழுமையாக குணமடைந்து விட்டதும் என்றும், எனவே மேலும் மருத்துவ செலவிற்கு ரூ.1 லட்சம் செலவாகும் என்று நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் வியாபாரம் செய்வதன் மூலம் ரூ.20 ஆயிரம் சம்பாதிப்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பின்னிட்டு ரூ.50 ஆயிரம் சம்பாதிப்பதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் என்னுடைய கணவர்தான் என்றும், 3 ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு எந்தவிதத்திலும் காரணம் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு தொகை செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளரையோ அதன் காப்பீடு நிறுவனத்தையோ வழக்கில் கட்சியாக சேர்க்காததால் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (3ம் எதிர்மனுதாரர் தரப்பில் ) : இல்லை.

மறுவிசாரணை – இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.04.16 10:44:25 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.